**C.C. No.6/2025**

**Deposition of P.W. 1**

**Dated : 20.01.2026**

**Name : Jayakumar**

Solemnly affirmed by Assistant Tmt. Sheeba

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

மருதம்பாறை பிரிவில் மொத்தம் எத்தனை பீட்டுகள் உள்ளது என்றால் 2 உள்ளது. அவை மருதம்பாறை மற்றும் வண்ணத்தி பாறை. சம்பவ சமயத்தில் மருதம்பாறை பீட்டில் யார் வனக்காப்பாளராக பணியில் இருந்தார் என்றால் ரகு பணியில் இருந்ததார். சம்பவ சமயத்தில் வண்ணத்திபாறை பீட்டில் யார் வனக்காப்பாளராக பணியில் இருந்தார் என்றால் ஞாபகம் இல்லை. மருதம்பாறை பீட்டில் இருந்து களியல் வனச்சரக அலுவலகம் சுமார் 9 கிலோமீட்டர் தொலைவில் இருக்கும். நான் குடியிருந்த அரசு குடியிருப்பு பத்துகாணி பகுதியிலிருந்து சற்று தொலைவில் மேலே அமைந்துள்ளது. வனக்காப்பாளர் ரகுவும் அங்கு தான் குடியிருந்தார் என்றால் இல்லை. அவர் மருதம்பாறை பீட்டில் வனக்காப்பாளர் குடியிருப்பில் குடியிருந்தார். சம்பவ சமயத்தில் 2 பீட்டுகளில் மரங்கள் வெட்டுவதாக எனக்கு தகவல் ஏதேனும் வந்ததா என்றால் இல்லை. சம்பவ சமயத்தில் களியல் வனச்சரகத்தில் மரங்கள் வெட்டுவதாக எனக்கு தகவல் ஏதேனும் வந்ததா என்றால் இல்லை. களியல் வனச்சரகத்திற்குட்பட்ட பட்டா நிலங்கள் குறித்த ஆவணம் அலுவலகத்தில் இருக்கும் என்றால் சரிதான். வழக்கின் புல எண். 15/3 யாருக்கு சொந்தமான இடம், எவ்வளவு விஸ்தீரணம் என ஆவணத்தை பார்த்தால் தெரியும் என்றால் சரிதான்.

அந்த புல எண் யாருக்கு சொந்தமானது என்றால் தங்கராஜ் த/பெ கொச்சிப்பிள்ளை என்பவருக்கு சொந்தமானது. தங்கராஜ் என்பவர் தான் உரிமையாளர் என உறுதியாக சொல்ல முடியாது. அந்த புல எண்ணை பொறுத்து கிராம நிர்வாக அலுவலரிடம் இருந்து எந்த ஆவணமும் பெறவில்லை என்றால் சரிதான். சம்பவ தினத்தன்று நான் என்னுடைய குடியிருப்பில் இருந்தபோது வாகன தணிக்கை செல்வதற்கு யார் தகவல் சொன்னார்கள் என்றால் களியல் வனச்சரச அலுவலர். கடையாலமூடு சந்திப்பிலிருந்து மாஞ்சக்கோணம் செல்லும் சாலை எந்த திசையை நோக்கி உள்ளது என்றால் தெற்கு கிழக்கு திசையில் உள்ளது. தணிக்கையில் இருந்த பகுதி கடைகள் மற்றும் வீடுகள் உள்ள பகுதி என்றால் சரிதான். நான் சம்பவ தினத்தன்று 7.30 முதல் 8 மணிவரை தணிக்கையில் இருந்தேன். தணிக்கையில் இருந்த இடம் வனப்பகுதி இல்லை என்றால் சரிதான். தணிக்கையின்போது எத்தனை வாகனங்கள் சென்றது என குறிப்பெடுத்தேன் என்றால் இல்லை. கடந்து சென்ற வாகனங்களை ஆய்வு செய்தேன். 1வது எதிரி ஓட்டி வந்த வாகனத்தின் முனனால் கண்ணாடியில் எழுதப்பட்ட கைப்பேசி எண் யாருடையது என விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் அந்த கைப்பேசி எண்ணை தொடர்பு கொண்டபோது யாரும் எடுக்கவில்லை. தணிக்கை செய்த இடத்தில் இருந்து குலசேகரம் வனச்சரக அலுவலகத்திற்கு வாகனத்தை சுமார் 9 மணியளவில் கொண்டு சென்றோம். கைப்பற்றப்பட்ட தடிமரங்களில் எத்தனை மரங்கள் தீயில் கருகி இருந்தது என்றால் எண்ணிக்கை ஞாபகம் இல்லை. தடிமரங்களில் எந்த பகுதி எரிக்கப்பட்டிருந்தது என்றால் பட்டை மற்றும் மூட்டு பகுதி எரிக்கப்பட்டிருந்தது. தீயில் கருகிய தடிமரங்கள் குறித்து எதுவும் குறிப்படபடவில்லை என்றால் ஞாபகம் இல்லை. வாகனத்தில் ஆர்.சி புத்தகம் , லைசன்ஸ் ஏதேனும் கைப்பற்றினேன் என்றால் இல்லை. சம்பத்திற்கு பின்னிட்டு 7.6.2019 ஆம் தேதி முழுக்கோடு கிராமத்திற்கு செல்லும்போதும் கிராமநிர்வாக அலுவலருக்கு தகவல்

கொடுத்தேனா என்றால் இல்லை. முழுக்கோடு கிராமத்தில் வெட்டுமோட் டு அளவுகள் குறித்து ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய் தேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தேவராஜ் என்கிற மர வியாபாரியை வழக்கில் விசாரித்தேனா என்றால் இல்லை. முழுக்கோடு மற்றும் மூடோடு என்ற கிராமங்கள் பக்கத்து பக்கத்து கிராமங்கள் ஆகும். முழுக்கோட்டில் இருந்து களியல் சந்திப்பு வழியாக குலசேகரம் செல்வது சுலபமான வழி என்றால் சரிதான். மூடோடு பகுதியிலி ருந்துஅனிச்சமூடு நெட்டா வழியாக குலசேகரம் வருவதற்கு சுமார் 30 கிலோமீட்டா் தொலைவு ஆகும். மூடோடு பகுதியில் வேறு சோதனை சாவடிகள் ஏதுவும் இல்லை. எதிரிகளை நான் விசாரித்தபோது அலுவலகத்தில் யார் யார் இருந்தார்கள் என்றால் 4 பேர் இருந்தோம். சுமார் அரைமணிநேரம் எதிரிகளை விசாரணை செய்தேன். நான் சொல்வதுபோல் சொன்ன நாளில் சொன்னவிதத்தில் விசாரணை செய்யவில்லை என்றும், கைப்பற்றப்பட்ட வாகனம் 1வது எதிரிக்சுகு சொந்தமானது இல்லை என்றும், மர வியாபாரி தேவராஜ் என்பவரை தப்பிக்க வைத்தற்காக வேறு வழக்கில் கைப்பற்றப்பட்ட மரத்தடிகளை கொண்டு எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புல எண் 15/3 இடத்தின் உரிமையாளரை வழக்கி ல் விசாரிக்காமல் தேவராஜ் என்ற மரவியாபாரியை விசாரிக்காமல் அவர்களை வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வெட்டப்பட்ட தடிமரங்கள் வனப்பகுதியில் வெட்டப்பட்டது என பொய்யாக குறிப்பிட்டு எதிரிகள் மீது பொய்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.